28th January 1972]

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: (அ) ஆம்.

(இ) இப்புழைக் கற்கலவைத் தொழிற்சாலை முன்னரே வார்க்கப்பட்ட செங்கற்களையும் மணலையும் மூலப்பொருளாகப் பயன்படுத்தி மணல் தளக் கற்களையும் உற்பத்தி செய்ய அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வேண்டிய நிதி உதவி முழுவதையும் இந்திய அரசு கடனுக மாநிலத் திட்ட வரம்பிற்கு புறம்பாக அளித்துள்ளது. இத்தொழிற்சாலைக்கான (திருத்த) மதிப்பீடு ரூ. 365 லட்சமென்று மதிப்பிடப்படுகிறது. மணலைப் பயன்படுத்தி மாதிரி உற்பத்தி 1972 சனவரி இரண்டாவது வாரத்தில் மேற்கொள்ளப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்னர் 6 வாரத்திற்குள் முறையான உற்பத்தி ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU V. ISVARMURTI: Sir, has this industry anything to do with the constructon of pre-fabricated house?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவர் அவர்களே, ப்ரி-ஃபேப்பிரிகேட்டட் ஹவுஸுக்கும் (Prefabricated house) இதற்கும் சம்பந்தமில்லை. தொகைக் கற்கள் என்ற பெயரில் புது மாதிரியான செங்கற்கள் போலந்து நாட்டு உதவியோடு தயாரிக்கப்படுவதாகும்.

THIRU A. R. DAMODARAN: Sir, is it accepted that cellular concrete, which is being produced here, is likely to bring down the cost of house construction?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: இந்தத் தொழிற்சாலையைக் கொண்டுவந்ததற்கே காரணம் 5 சதவிகிதம் கட்டிடச் செலவில் மிச்சமாகும் என்பதுதான்.

Tamil Nadu Tourism Development Corporation

* 48 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Tourism Development Corporation has invited suggestions from the public for a Motif and Slogan about 1971; and

(*b*) if so, the details thereof?

தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் 1971-ம் ஆண்டைக் குறித்து பொதுமக்களிடமிருந்து சுற்றுலா நோக்கம், முழக்கம் குறித்து பொது மக்கள் தங்கள் கருத்துரைகளை அனுப்பும்படி கேட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

THE HON. THIRU K. RAJARAM: (*a*) Yes, The Tamil Nadu Tourism Development Corporation Limited has invited suggestions from the public for a Motif and Slogan.

[28th January 1972

(b) Advertisements were released inviting suggestions from leading Artists and Advertising Agencies for a Motif and Slogan for adoption by the Tourism Corporation. It was specified that the Motif suggested should be simple and must represent Tamil Culture and tradition. It was also offered that the accepted Motif and Slogan would be given a suitable reward. The advertisements were released for publication in the Indian Express, The Hindu and in the Tamil Arasu in September, 1971. As no Motif worth acceptance was received, the Board of Directors decided to entrust the work to the National Institute of Desigus, Ahmedabad.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether the 'Motif and Slogan' are for the whole of the State or for individual districts also ?

THE HON. THIRU K. RAJARAM : Sir, it is meant for the entire State of Tamil Nadu.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the lack of response, may I know what was the reward that was offered ?

THE HON. THIRU K. RAJARAM : The Tamil Nadu Tourism Development Corporation Limited is thinking of giving up to Rs. 5,000 as reward.

Trampled to death by elephants

* 49 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the number of persons trampled to death by elephants in the forest lands adjoining Gobichettipalayam in Coimbatore District about 9th August 1971; and

(b) if so, the details thereof ?

யானை மிதித்து சாவு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஆகஸ்டு 12-ஆம் நாள் அளவில் கோயம்புத்தூர் மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தை அடுத்துள்ள காட்டு நிலங்களில் யானைகளால் பல சாவலாட்கள் மிதித்துக் கொல்லப்பட்டனரா ?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) & (இ) அரசுக்குக் கிடைத்துள்ள அறிக்கையின்படி, 1971-ம் ஆண்டு ஆகஸ்டு 7, 8 தேதிகளில், வடக்குக் கோயம்புத்தூர் வனக் கோட்டத்தைச் சேர்ந்த தலமலை வனச் சரகத்தில் உள்ள தாளவாடி பகுதியில் மூவர் யானையால் மிதித்துக் கொல்லப்பட்டனர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இதுபோன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறுகின்றனவா ? அவை எப்படி நடக்கின்றன ? எத்தனை முறை நடக்கின்றன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : எப்படி நடக்கிறது என்ற விவரமில்லை. அப்படிப்பட்ட யானைகளைச் சுடுவதற்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.